**O.S.261/2015**

**Date. 24.04.2025**

Dw–1 – இசக்கி

**மனுக்கள் (ஐஏஎண்.10 மற்றும் 11/2024) அனுமதிக்கப்பட்டதன் பேரில் பிவாசா–1 மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதி தரப்பில்)**

நான் ஏற்கனவே இவ்வழக்கில் பிவாசா–1 ஆக விசாரிக்கப்பட்டு என் தரப்பில் பிவாசாஆ–1 முதல் பிவாசாஆ–9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் எனது தரப்பில் கூடுதல் ஆவணங்களை தற்போது தாக்கல் செய்கிறேன்.

எனது மற்றும் 2ம் பிரதிவாதியான என் மனைவி பெயரிலும் தனித்தனியாக இரண்டு வீடுகள் உள்ளது. எனது பெயரில் உள்ள வீடு வாதி வீட்டிற்கு மேல்புறம் உள்ளது. 2ம் பிரதிவாதியான என் மனைவியின் வீடு வாதி வீட்டிற்கு தென்புறம் உள்ளது. என் மனைவி பெயரில் உள்ள வீட்டில் கீழ்தளம் மற்றும் மேல்தளம் உள்ளது. மேல்தளம் 2005ம் ஆண்டு கட்டப்பட்டது. மேல்தளம் கட்டுவதற்கு நான் பஞ்சாயத்தில் அனுமதி பெற்றுள்ளேன். அந்த அனுமதி வரைபடம் (2 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ–10 மற்றும் பிவாசாஆ–11. பிவாசாஆ–11 மாடிக்குரிய வரைபடம் ஆகும். மேற்படி சொத்துக்களை நானும், என் மனைவியும் அனுபவித்து வருகிறோம். மேற்படி சொத்துக்களில் கீழ்தளத்தில் என் மகனும், மேல்தளத்தில் நானும், என் மனைவியும் அனுபவித்து வருகிறோம்.

(குறுக்கு விசாரணை வாதிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/–இசக்கி

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பித்து சாட்சி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட பின்பு என்னால் சான்றொப்பம் இடப்பட்டது.

JEYASANKARAKUMARI

Digitally signed by JEYASANKARAKUMARI
Date: 2025.04.24 17:39:46 +0530